# இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணககாய்வுச் சான்றுகளை நான் பொற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆண்டுகள் தொடர்பான ரூபா 2,191,072 தொகையான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் பெறுமதி மற்றும் ரூபா 1,359,072 பெறுமதியான வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகளின் 87 விடயங்கள் என்பன 2013 யூன் 30 வரை வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ரூபா 438,214 தொகையான அந்தப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளிற்கான பெறுமானத்தேய்வு வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 1,708,750 இற்கான கட்டிட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு கட்டிடங்கள் திணைக்களத்தால் கையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் கட்டிடங்கள் திணைக்களத்தால் பூர்த்தியாக்கல் சான்றிதழ் சமர்ப்பிக்காமை காரணமாக அவை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 1,202,957,271 தொகையான வருமானத்திற்கு மேலான செலவினம் திரண்ட நிதியத்திற்கு சாட்டுதல் செய்வதற்குப் பதிலாக தவறாக பொது ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன்விளைவாக, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது ஒதுக்கக் கணக்கில் வரவு மீதி காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பல்கலைக்கழகத்தின் பல உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 55,050 தொகையான பெறவேண்டிய வாடகையில், ரூபா 27,250 தொகை மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 3,791,274 தொகையான வட்டி மானிய அளிப்பு நிதியத்திலிருந்து பெறவேண்டியவையாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இத் தொகைமீளாய்வாண்டிற்கான முதலீட்டு வருமான கணக்கிற்கு தாக்கல் செய்வதற்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட நிதிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொங்கல் கணக்காக ரூபா 364,569 தொகை காட்டப்பட்டிருந்ததுடன் இதில் அந்த மீதிகளை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஆறு ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 103,410 தொகை இருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது முறையான நாட்குறிப்புப் பதிவுகளைச் செய்யாமல் ரூபா 993,456 கூட்டு மொத்தத் தொகையான சம்பள முற்பணங்கள் கணக்கு மற்றும் இறக்குமதி முற்பணக்கணக்கில் பல திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

(ஏ) 2012 திசெம்பர் மாதத்தில் நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவிற்கான ரூபா 705,500 கூட்டுமொத்தத் தொகையான ஆறு எண்ணிக்கையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போலியானவையாக இருந்த போதிலும் இந்த மோசடி கொடுக்கல் வாங்கல் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கணக்கிற்கு தவறாக வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து ஆண்டுகளிற்கும் அதிகமாக உள்ள ரூபா 504,237 தொகையான நிலுவையான மீதிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ஐயக் கடனுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐந்து ஆண்டுகளிற்கும் அதிகமாக உள்ள ரூபா 2,562,402 தொகையான நிலுவையான மீதிகளை வியாபார செலுத்த வேண்டியவைகள் உள்ளடக்கியிருந்தன.

(இ) பல்கலைக்கழக உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்படாத ரூபா 1,080,499 தொகையான சம்பளங்கள், நி.பி 272(2) மற்றும் நிபி 290 இன்படி நடவடிக்கை எடுக்காமல் 01 - 02 ஆண்டுகள் வீச்செல்லைகொண்ட காலமாக செலுத்த வேண்டியவையாக இருந்தன.

(ஈ) ரூபா 311,866,788 கூட்டுமொத்தத் தொகையான கட்டிடங்கள் திணைக்களம், இலங்கை மின்சார சபை, பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் புத்தகங்கள் சஞ்சிகைகள் இறக்குமதிக்கான வழங்குனர்கள் மற்றும் சம்பளங்கள் போன்ற பலவேறு தரப்பினரிற்கு மேற்கொள்ளப்பட்ட முற்பணங்கள் 2013 யூன் 30 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. இதில் 10 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 3,810,882 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) ஒரு உத்தியொகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 53,055 ஆன இடர்கடன் மீதி மற்றும் இன்னொரு உத்தியொகத்தரிடமிருந்து அறவிடவெண்டிய ரூபா 10,802 ஆன மோட்டார் சைக்கிள் கடன் மீதி என்பன முறையே 09 ஆண்டுகள் மற்றும் 11 ஆண்டுகள் வரையான வீச்செல்லைகொண்ட காலமாக நிலுவையாக இருந்தன.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 1,160,054,959 கூட்டுமொத்தத் தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி புத்தக பெறுமதி அடிப்படையில்நிதக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது அச்சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், நிலையான சொத்துக்களின் விரிமான பட்டோலை மற்றும் நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு என்பன முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை அல்லது கணக்காய்விற்காக சமர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட சொத்துக்களின் உள்ளதன்மை, சரியான தன்மை மற்றும் பூரணத்துவம் என்பவற்றை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) ரூபா 36,402,416 கூட்டுமொத்தத் தொகையான பதிவேட்டுப் பொருட்கள், பிரயாணக் கோரிக்கைகள், படிகள், வாடகை கொடுப்பனவுகள் சுத்திகரிப்பு, தொலைத்தொடர்புக் கட்டணங்கள், வாகனத் திருத்தங்கள், மற்றும் சேவைக்கான கொடுப்பனவுகள் போன்ற அத்தகைய கணக்கு விடயங்கள் வருடாந்த மெய்மையாய்வு அறிக்கைகள், முன் நிகழ்ச்சதித்திட்டங்கள் மற்றும் அதிகாரம், தொலைபேசிப்பதிவேடு, வாகனப்பரிசோதனை அறிக்கைகள், மற்றும் வாகன சம்பவக் குறிப்புப் புத்தகங்கள் போன்றன கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

(இ) நன்கொடைகள், நட்டங்கள் மற்றும் வாகன விபத்துக்களால் ஏற்பட்ட சேதங்கள், ஆராய்ச்சிப் படிகள் மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் கொடுப்பனவுகள் போன்ற அத்தகை விடயங்கள் பின்வரும் சான்றுகளோ அல்லது உறுதிச்சீட்டுக்களோ சமர்ப்பிக்காமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

- வெளிநாடுகள்/ தூதரகங்களிமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் மீதான விரிவான அறிக்கைகள்
- பல்கலைக்கழக செனற் சபையின் கூட்டக் குறிப்புகள்
- விபத்துக்கள் மற்றும் நட்டங்களின் அறிக்கைகள்
- முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்
- கல்விசார் உத்தியோகத்தர்களின் ஆராய்ச்சி விபரங்கள்

### 1.2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவை | |

| | |
|---|---|
| (i) அத்தியாயம் XX இன் 3.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்தின் கல்விசார் பதவியணியினர் தொடர்பில் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்வதற்கானவருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் XXII இன் 18.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் அல்லது பல்கலைக்கழக உப வேந்தரால் பதவிநிலை உதவியாளர் ஒருவர் இடைநிறுத்தப்பட முடிந்த போதிலும் அதற்கு முரணாக அவர் பல்கலைக்கழத்தின் பதிவாளரால் இடைநிறுத்தப்பட்டிருந்தார். |
| (iii) அத்தியாயம் XXII இன் 11.1 ஆம் பிரிவு | விசாரணைக் குழு நியமித்து ஒரு மாதத்தின் பின்னரும் மோசடிசெய்த கொடுப்பனவு தொடர்பில் ஒழுக்காற்று நடைமுறைகள் மீதான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் XXVI இன் 2, 3, 4 ஆம் பிரிவுகள் | வெளியீடுகள் மற்றும் நூலகப் புத்தகங்களின் இருப்பு வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப் பிரமாணங்கள்

| | |
|---|---|
| (i) நி.பி. 135 135(4) | நிதி அதிகாரக் கையளிப்பு கணக்கீட்டு உத்தியோகத்தரால் வருடாந்தம் திருத்தப்பட்டு இருந்ததுடன் கணக்காய்விற்கு அனுப்பட்டுமிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 136(6) | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருடைய பதிவேடுகள் ஒப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றை சான்றுபடுத்தும் உத்தியோகத்தர் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை இணக்கம் செய்திருக்கவில்லை. |
| (iii) நி.பி. 140(3) | அனுமதிக்கப்பட்ட தனிநபருடைய பதிவேடுகள் ஒப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் |

| | |
|---|---|
| | அச்சான்றுபடுத்தும் உத்தியோகத்தருடன் குறைந்தது ஒரு மாதத்தில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை |
| (iii) நி.பி. 140(3) | கொடுப்பனவு செய்தவதற்கு முன்னர், பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருடைய அவருடைய/ அவளுடைய விசேட அறிவிறிகுள் எந்தவொரு விடயங்களையும் ஆராயவேண்டும். எவ்வாறாயினும், ஆறு சந்தர்ப்பங்களில் போலியான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் ரூபா 705,500 தொகை செசலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) நி.பி. 272(3) | செலுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சம்பந்தப்பட்ட மாதத்தின் முடிவிலிருந்து குறைந்தது ஆறு கிழமைகளிற்குள் மாதாந்தம் கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி. 1645 | வாகனங்களிற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர் ஒவ்வொரு வாரமும் ஓடிய மாதந்த பிரயாணப் பொழிப்பு மற்றும் ஒவ்வொரு மாதத்திற்குமுரிய நாளாந்த ஓட்ட அட்டவணை அறிக்கை அடுத்துவரும் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உப வேந்தர் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) 1980 பெப்ரவரி 25 ஆந் திகதிய 63 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | பாதீடிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்குமிடையில் உள்ள வித்தியாசங்களையும் அந்த முரண்களிற்கான காரணங்கள் என்பவற்றையும் காட்டுகின்ற அறிக்கை மீளாய்வாண்டிற்கான இறுதிக் கணக்குகளுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1990 ஒக்தோபர் 10 ஆந்திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | பதிலீடு செய்யும் அடிப்படையில் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்குமிடத்து பதிலீடு செய்யப்பட்ட வாகனங்கள் புதிய வாகனங்கள் பதிவு செய்த திகதியிலிருந்து மூன்று மாதங்களிற்குள் கைதவிர்க்கப்பட வேண்டும். அத்தகைய வாகனங்களின் விற்பனை பொறுப்புகள் சாத்தியமானளவு விரைவாக ஆனால், 14 நாட்களிற்கு முன்னர் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், இந்நடைமுறை மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 60,290,341 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடப்படும் போது ரூபா 100,783,982 ஆன பற்றாக்குறையை விளைவித்திருந்தது, ஆதலால் ஆளுக்குரிய வேதனங்கள், ஒப்பந்த சேவைகள், பெறுமானத் தேய்வு மற்றும் காலக்கழிவுச் செலவினங்கள் என்பவற்றிலுள்ள அதிகரிப்பு காரணமாக பல்கலைக்கழகத்தின் நிதிசார் விளைவுகளில் ரூபா 40,493,641 ஆன மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

### 2.1.2. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இருக்கும் நேரடி தொலைபேசி இணைப்புகளைப் பயன்படுத்துவதைக் குறைப்பதன் மூலம் உத்தியோக பூர்வ தொலைபேசி கட்டணங்களை குறைக்கும் நோக்கில் 2011 சனவரி மாதத்தில் பல்கலைக்கழகத்தினருக்கு உள்ளக தொலைபேசி வசதிகள் பொருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான தொலைபேசிக் கட்டணங்கள் ஒரே சமயத்தில் உள்ளக இணைப்புக்கள் ஊடாக வெளிச் செல்லும் வசதிகள் இருந்தமை காரணமாக முன்னைய ஆண்டிற்கான கட்டணங்களுடன் ஒப்பிடும்போது ரூபா 2,635,377 அல்லது 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் பிரதிப் பதிவாளர் (மூலதன வேலைகள்) முறையே 2009 ஏப்ரல் மற்றும் 2010 நவம்பர் மாதத்திலிருந்து வாடகை செலுத்தாமல் விருந்தினர் விடுதியில் வசித்தனர். இது தொடர்பில், ரூபா 37,262 கூட்டுமொத்தத் தொகையான மின்சாரக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழக நிதிகளிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ரூபா 242,263,073 மற்றும் ரூபா 132,618,288 ஆன தொகைகள் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் முறையே நீண்டகால மற்றும் குறிகியகால முதலீடுகளாக காட்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், முதலீடுகளிலிருந்தான வருமானமாக மொத்த முதலீடுகளில் 0.001 சதவீதமாகவிருந்த ரூபா 4,497 தொகை மாத்திரம் கணக்கிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. ஆதலால, பல்கலைக்கழக நிதிகள் அதகூடிய நன்மைகளை உழைக்கும் நோக்கில் வினைத்திறனானவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது

### 2.1.3. சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பின்வரும் வாகனங்கள் பயன்பாறின்றி இருந்தன. எவ்வாறாயினும், அந்த வாகனங்களை பல்கலைக்கழகத்தின் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்துவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| லான்ட்மாஸ்ரர் | 01 |
| ஸ்கூட்டர் | 01 |
| முச்சக்கர வண்டி | 01 |
| | ---- |
| | 03 |
| | ----- |

(ii) ரூபா 4,107,424 கூட்டுமொத்தத் தொகையான வழங்கல்கள் மற்றும் பராமரிப்பு விடயங்கள் பல்கலைக்கழகத்தின் களஞ்சியத்தில் 01 முதல் 14 ஆண்டுகள் வீச்செல்லை கொண்ட காலமாக பயன்படுத்தப்படாது இருந்தன. இது தொடர்பில் அவற்றினை பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 182,400 ஆகக் கொள்வனவு செய்யப்பட்ட நேரப்பதிவு இயந்திரம் 2001 இலிருந்து பயன்படுத்தப்படாது இருந்தது.

(iv) ரூபா 1,482,000 ஆகக் கொள்வனவு செய்யப்பட்ட நூற்று ஐப்பத்தியாறு இரும்புக் கட்டில்கள் ஆறு ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாது இருந்தன.

(v) நூற்று அறுபத்தியொரு கணனிகள் மற்றும் உபபாகங்கள், மல்டிமீடியா புறொஜெக்டர் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன பீடாதிபதி அலுவலகம், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், மனித வளங்கள் திணைக்ளம், கணக்கியல் திணைக்களம் மற்றும் பௌதீகவியல் திணைக்களம் என்பவற்றில் பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப்பயன்படுத்திய சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தன.

(vi) பல்கலைக்கழகத்தில் எல்ஏஎன்/ டபிள்யூஎன் பொருத்துவதற்காக இரண்டு தனியார் வாடிக்கையாளர்கள் மூலம் கொண்டுவரப்பட்ட சீடா செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொளாயிரத்து எழுபது விடயங்கள் கணனி விஞ்ஞான திணைக்களத்தில் இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக பயன்பாடின்றி விடப்பட்டிருந்தன.

(vii) பல ஆண்டுகளாக கணனி விஞ்ஞானத் திணைக்களததில் 223 சேதமடைந்த விடயங்கள் பயனற்றிருந்ததுடன் நி.பி. 110 இன் பிரகாரம் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(viii) தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளமல் 2008, 2009, 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் விளையாட்டு விஞ்ஞான பிரிவின் ஒருங்கிணைப்பாளரால் முப்பத்து ஏழு விளையாட்டு உபகரணங்கள் கைதவர்க்கப்பட்டிருந்தன.

**2.1.4. சர்ச்சைக்குரிய விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கட்டிடங்கள், வளநபர்கள் மற்றும் ஏனைய சகல வசதிகள் என்பன பல்கலைக்கழகத்தில் கிடைக்கத்தக்கதாகவிருந்த போதிலும் சட்ட திணைக்களத்தின் 4 ஆம் ஆண்டு மாணவர்களிற்கான விரிவுரைகள் 2008 மார்ச் மாதத்திலிருந்து கொழும்பில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்தில் நடாத்தப்பட்டிருந்ததுடன், 2012 திசெம்பர் 31 வரை ஒரு மாதத்திற்கு ரூபா 100,000 வீதத்தில் வாடகையாக ரூபா 5,430,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2011 இல் முற்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த விரல் அடையாள இயந்திரங்கள் முறையாகப் பொருத்துவதென்று திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவால் வழங்கப்பட்ட 2010 பெப்ரவரி 15 ஆந் திகதிய 02/2010 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கையின்படி அது குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 2012 ஒக்தோபர் 15 இல் 14 நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 8,593,446 பெறுமதியான இருபத்தியிரண்டு எண்ணிக்கையான காசோலைகள் எழுதப்பட்டிருந்தப, பின்னர் அக்காசோலைகள் 2013 பெப்ரவரி 12 இல் இரத்து செய்யப்பட்டிருந்தன.

**2.2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.2.1 தெட்டுணரக்கூடிய சொத்துக்களின் பௌதீக உள்ள தன்மையின் மெய்மையாய்வு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கேவையின் அத்தியாயம் XXVI ஆம் அத்தியாயத்தின் 2, 4, மற்றும் 5 ஆம் பிரிவுகள் மற்றும் அத்தியாயம் XXIV இன் 3.1 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 756 எப்பவற்றின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக நிலையான சொத்துக்கள் மற்றும் பொருளிருப்பு விடயங்கள் என்பன மீதான பௌதீக

மெய்மையாய்விற்கான வருடாந்த கணப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2. பரீட்சைகளும் பெறுபேறுகளும்

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தின் கீழும் நடாத்தப்பட்ட பல்வேறு பாடநெறிகளிற்கான பரீட்சைகள் இடம்பெறுவதற்கான திகதிகள் மற்றும் அந்த பரீட்சைகளின் பெறுபேறுகளை விடுவிப்பதற்கான இலக்குத் திகதிகள் என்பன நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் விவசாயம், கலை, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தகம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பீடங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சைகள் பிரிவு என்பவற்றால் நடாத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளை விடுவிப்பதில் குறிப்பிடக் கூடிய தாமதங்கள் இருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. 1995 யூலை 14 ஆந்திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின்படி, பரீட்சைகளின் பின்னர் மூன்று மாதங்களிற்குள் பெறுபேறுகள் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால், பெறுபேறுகள் 4 முதல் 14 மாதங்கள் வீச்செல்லை கொண்ட காலமாக தாமதப்பட்டிருந்தன, அதனால் மாணவர்கள் நேரகாலத்தில் அவர்களுடைய வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்கள் பெறுவது தடுக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 ஒருமாணவனுக்கான கிரயம்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் பாடநெநறிகளிற்காக பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 5,896 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 644,212,414 ஆகும். ஆண்டிற்கான ஒரு மாணவருக்கான சாரசரி மீண்டெழும் கிரயம் ரூபா 109,263 ஆக இருந்தது.

### 2.2.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகம் இருக்கின்ற வெற்றிடங்களைக் குறைப்பதற்குப் பதிலாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை பதிலாக பதவியணியினரை தற்காலிக அடிப்படையில் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். விபரங்கள் பினவருமாறு உள்ளன.

| வகுதி | அங்கீகரித்த பதவியணி எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணி எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான பதவியணி எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| கல்விசார் பதவியணி | 456 | 338 | 118 | - |
| கல்விசார் ஆதரவு பதவியணி | 56 | 30 | 26 | - |
| தற்காலிக கல்விசார் பதவியணி | 126 | 168 | 04 | 46 |
| கல்விசாரா பதவியணி | 726 | 531 | 195 | - |
| மொத்தம் | 1,364 | 1,067 | 343 | 46 |

(ஆ) கல்விசார் பதவியணியினருக்கான வருகைப் பதிவேடு நீண்ட காலமாக பேணப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மீளாய்வாண்டில் பதவியணியினருக்கான என்பவற்றை விடுமுறை, செய்யப்பட்ட சம்பள கொடுப்பனவின் சரியான தன்மை மீளாய்வாண்டிற்கான கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

### 2.2.5 ஆட்சேர்ப்புகளும் நியமனங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக் கேவையின் III ஆம் அத்தியாயத்தின் 20.16 ஆம் பந்தி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் வழங்கப்பட்ட 2012 செப்தெம்பர் 28 ஆந் திகதிய யூஜீசீ/எச்ஆர்/3/1/6 ஆம் இலக்க கடிதம் என்பவற்றில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளாமல் அனுதாப பின்னனியை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு தரப்பினரிடமிருந்தான மேன்முறையீடுகளை கருத்திற்கொள்வதன் மூலம் பதவியணியினரை மீளமர்த்துவதற்கான தீர்மானத்தை அனுப்புவதற்கு பல்கலைக்கழக தீர்மானித்தது.

(அ) உயர் கல்வி நிறுவனங்கள் சிரேஸ்ட உதவிப் பதிவாளர், உதவிப் பதிவாளர்கள் மற்றும் ஏனைய அதேதர பதவியிணியினரின் சேவைகளை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரம் உடையது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவின் செயலாளர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உப வேந்தருக்கு 2004 திசெம்பர் 10 ஆந்திகதிய யூஜீசீ/எச்ஆர்/1 ஆம் இலக்க அவருடைய கடிததத்தின் மூலம் தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும், பதவியணியினர் சேவைகளின் உறுதிப்படுத்லில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாய் மொழி மூல பரிட்சைக்காக வித்தியாமான குழுக்களிற்காக வித்தியாசமான எண்ணிக்கை செனற் உறுப்பினர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ii) நியமனக் கடிதத்தின் 06 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு கல்விசாரா பதவியணியினரின் செயலாற்றலை மெய்மையாய்வு செய்வதற்கு குழுக்களின் உறுப்பினர்களை நியமித்தல்/ தெரிவுசெய்தலில் பொருத்தமான முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு கைநூலின் 4.2.1 ஆம் வழிகாட்டலின்படி, விரிவான கொள்வனவுத் திட்மொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1(பீ) ஆம் வழிகாட்டலின்படி, குறைந்தது மூன்று ஆண்டுகளிற்கு ஒரு தடவையாவது எதிர்பார்க்கப்படும் கொள்வனவு நடவடிக்கைகள் பிரதான கொள்வனவு திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகமானது மீளாய்வாண்டிற்கான கொள்வனவு நடவடிக்கைகளை மாத்திரம் பட்டியலிட்டிருந்தது.

(இ) பிரதான கொள்வனவு திட்டத்தின் 07 ஆம் இலக்கம் முதல் 13 ஆம் இலக்கம் வரை குறிப்பிடப்பட்ட விடயங்களிற்கான பூர்த்தியாக்கலின் இலக்கு திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதான கொள்வனவு திட்டம் உயர் கல்வி அமைச்சு செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொள்வனவு வழிகாட்டலின் 4.2.2 ஆம் வழிகாட்டலின்படி, கொள்வனவு காலப் பட்டியல் தொடக்க புள்ளயிலிருந்து அதன் பூர்த்தியாக்கல் வரை காலமுறைப்படியான வரிசையில் ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளினதும் படிமுறைகள் என்பன தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், கால அட்டவணை மற்றும் ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கையின் படிமுறைகள் என்பன பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. கணக்களிதகைமை மற்றும் நல்ல ஆளுகை

### 3.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந்திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின்படி 2012 – 2016 காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஆண்டுச் செயல்நடவடிக்கைத் திட்டம்

2012 ஆண்டிற்குப் பதிலாக 2012 – 2016 காலத்திற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளில் முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை.

### 3.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காயவு நிகழ்ச்சித்திட்டத்தின்படி, பின்வரும் கொடுக்கல் வாங்கல் பகுதிகள் உள்ளக கணக்காய்வு பிரிவால் பரீட்சிக்கப்பட்டு/ உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.

(அ) மூலதன வேலை செயற்திட்டங்கள் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் மீதாக பிந்திய கணக்காய்வு

(ஆ) பல்கலைக்கழகத்தின் கொள்வனவு வேலைகள்

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் முகாமைத்துவம்

(ஈ) கடன்களும் முற்பணங்களும்

## 3.4 கணக்காய்வு ஐயவினாக்கள் மீதான தொடர்நடவடிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறித்த சில ஐயவினாக்களை பல்கலைக்கழக முகாமைத்துவம் தவறவிட்டிருந்ததுடன் கருத்திற்கொள்ளக் கூடிய காலத்தின் பின்னர் திரும்பவும் பிரதிகைக் கோரியிருந்தமையால் ஒவ்வொரு நிதியாண்டிலும் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களின் விபரங்கள் மற்றும் எண்ணிக்கை தெரியாமலிருந்தது.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கணக்காய்வு ஐயவினாக்களின் பிரதிகள் அனுப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அந்தக் கணக்காய்வு ஐய வினாக்களின் பிரதிகளை அனுப்பியிருக்கவில்லை.

(இ) பதிலளிக்கப்பட்டிருக்காத கணக்காய்வு ஐயவினாக்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | பதிலளிக்கப்பட்டிருக்காத கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை | தாமதமான காலம் (மாதங்கள்) |
|---|---|---|
| 2011 | 01 | 16 |
| 2012 | 04 | 02-09 |

## 3.5 ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந்திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின்படி 2013 ஒக்தோபர் 20 வரையும் 2011 ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையில் குறிப்பிடக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) நூலக நிர்வாகம்

(இ) களஞ்சிய நிர்வாகம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) செயற்திட்டங்களிலுள்ள தாமதங்கள்

(ஊ) பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்

(எ) கொள்வனவுகள்

(ஏ) மனிதவளங்கள் முகாமைத்துவம்

(ஐ) பாதீடு